பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**30 12 2025** **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

## <u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் வளர்ச்சிப்பாதைக்கு வலு சேர்க்கும் வகையில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. மேற்குவங்கத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி ஆட்சி அமைக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

3. மாணவர்களின் தேர்வு தொடர்பான அச்சத்தை களைவதற்கான பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சியில் பங்கேற்க இதுவரை 2 கோடியே 92 லட்சம் பேர் பதிவு செய்துள்ளனர்.

4. இலங்கை உயர்நீதிமன்றத்தை சேர்ந்த 20 நீதிபதிகளுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக கொழும்புவில் உள்ள இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.

5. இலங்கைக்கு எதிரான 5-ஆவது மற்றும் இறுதி மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதலில் பேட் செய்து வருகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

நாட்டின் வளர்ச்சிப்பாதைக்கு வலு சேர்க்கும் வகையில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளர்ச்சி குறித்து சமூக வலைதளத்தில் தமது கருத்துக்களை பகிர்ந்துள்ள பிரதமர், நாட்டின் வளர்ச்சிக்கு இந்தியாவின் பூகோள அமைப்பும், இளைஞர்களின் பங்களிப்பும், மக்களின் நாட்டுப்பற்றும் மிகுந்த பலன்களை அளித்திருப்பதாக கூறியுள்ளார்.

2025-ஆம் ஆண்டு பொருளாதார மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களின் ஆண்டாக திகழ்கிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

அரசின் நவீன மயமாக்கப்பட்ட அமைப்புகள், எளிமையான அரசு நிர்வாகம் போன்றவை நீண்டகால மற்றும் உள்ளார்ந்த வளர்ச்சிக்கு அடித்தளமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிதாக கொண்டுவரப்பட்ட தொழிலாளர் சட்டங்கள், நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்கள், சந்தை சீரமைப்பு போன்றவை நாட்டின் வளர்ச்சிக்கான அத்தியாயத்திற்கு நம்பிக்கையையும், நீண்டகால நிலைப்பாட்டையும் அளித்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

உலக சமுதாயம், இந்தியாவின் வளர்ச்சியை பாராட்டுவதோடு மட்டுமின்றி, அடுத்த தலைமுறைக்கான சீர்திருத்த நடவடிக்கைகளையும் உற்று நோக்கி வருவதாக தெரிவித்துள்ளார்.

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற இலக்கை எட்டுவதற்கான முயற்சிகள் வலுப்பெற்றுள்ளதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

ஸ்ரீநாராயண குருவின் போதனைகள் மக்களுக்கு தொடர்ந்து உத்வேகம் அளித்து வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் வர்கலாவில் 93-ஆவது சிவகிரி புனித யாத்திரையை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், ஆன்மீகம் மற்றும் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்று குறிப்பிட்டார்.

ஆதிசங்கரர் மற்றும் ஸ்ரீநாராயண குரு கேரளா உலகிற்கு வழங்கிய மாபெரும் மகான்கள் என்று அவர் பெருமிதம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கேரள ஆளுநர் திரு ராஜேந்திர விஷ்வநாத் அர்லேக்கர், மத்திய இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>>

மேற்குவங்கத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி மூன்றில் இரண்டு மடங்கு பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், திரிணாமுல் காங்கிரஸ் தலைமையிலான மேற்குவங்கத்தில், ஊழல் மற்றும் நிர்வாக சீர்கேடுகளால் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

ஊடுருவலை தடுக்க மேற்குவங்க அரசு தவறிவிட்டதாக குற்றம் சாட்டிய திரு அமித் ஷா, இப்பிரச்சினையை முன்வைத்தே அம்மாநிலத்தில் பிஜேபி தேர்தலை சந்திக்க இருப்பதாகவும் கூறினார்.

<<<<<<>>>>>>

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் இருந்த குறைபாடுகளை நீக்கி, தற்கால தேவைகளை நிறைவேற்றும் வகையிலேயே வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக

வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படுவதாக மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

போபாலில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்தியில் காங்கிரஸ் ஆட்சியில் இருந்த காலங்களிலும் பல்வேறு வேலைவாய்ப்புத் திட்டங்களின் பெயர்கள் மாற்றியமைக்கப்பட்டு இருப்பதாக கூறினார்.

இந்த இயக்கத்தை மேலும் திறம்பட செயல்படுத்தும் விதமாக, பிரதமரின் கதி சக்தி திட்டத்துடன் இணைக்கப்பட்டிருப்பதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, மாணவர்களின் தேர்வு தொடர்பான அச்சத்தை களைவதற்கான பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சியில் அடுத்த மாதம் கலந்துரையாட உள்ளார்.

இதில் 2 கோடியே 92 லட்சம் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் பதிவு செய்துள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

ஆறாம் வகுப்பிலிருந்து 12-ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் இதில் பங்கேற்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**mygov** இணையதளத்தில் இதற்காக அடுத்த மாதம் **11**-ஆம் தேதிவரை பதிவு செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இனி, நடப்பாண்டில் மத்திய அரசின் சாதனைகள் குறித்த தொகுப்பு.

**(Opening Tune — 20 Sec.)**

இதில் இன்று இடம்பெறுகிறது, நமது கலாச்சார வலிமை.

**(Closing Tune — 15 Sec.)**

**(VO**

*உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்ற மகா கும்பமேளாவில் **66** கோடிக்கும் மேற்பட்டோர் பங்கேற்றது உலக சாதனையாகும்.*

***524** ஆண்டுகள் பழமைவாய்ந்த திரிபுர சுந்தரி கோவில் மேம்படுத்தப்பட்டு பிரதமர் திரு நரேந்திர மோடியால் திறக்கப்பட்டது.*

*தமிழ் கலாச்சாரத்தின் பெருமைமிகு வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில், கங்கைகொண்ட சோழபுரத்தில் நடைபெற்ற முதலாம் ராஜேந்திர சோழனின் பிறந்தநாள் கொண்டாட்டங்களில் பிரதமர் பங்கேற்றார்.*

*தேசிய பாடலான வந்தே மாதரத்தின் **150**-ஆவது ஆண்டு கொண்டாட்டங்களையும் கடந்த மாதம் 7-ஆம் தேதி பிரதமர் தொடங்கிவைத்தார்.*

*இதில், மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். ஒரு கோடியே **60** லட்சத்திற்கும் மேற்பட்டோர் வந்தே மாதரம் பாடலை பதிவு செய்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்தனர்.*

*மராட்டிய மன்னர்களின் ராணுவ வலிமையை எடுத்துரைக்கும் பகுதிகள் யுனஸ்கோவின் புராதன சின்னங்களின் பட்டியலில் இணைக்கப்பட்டன.*

*தீபாவளி பண்டிகையும் யுனஸ்கோவின் புராதன பட்டியலில் சேர்க்கப்பட்டது நமது கலாச்சாரத்திற்கு கிடைத்த பெருமையாகும்.*

*ஓலைச்சுவடிகளை பாதுகாக்கும் **Gyan** பாரதம் இயக்கத்தையும் பிரதமர் தொடங்கிவைத்தார்.*

*குடியரசு தின அணிவகுப்பு பேரணியில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் கின்னஸ் உலக சாதனையில் இடம்பெற்றது.*

*சுதந்திரத்திற்காக பாடுபட்ட தலைவர்களின் பெருமையை எடுத்துரைக்கும் வகையில் மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.*

*இந்த நடவடிக்கைகள் கலாச்சாரத்தை பாதுகாக்க வேண்டும் என்பதில் மத்திய அரசின் உறுதிபாட்டை எடுத்துரைப்பதாக உள்ளது என்றால் மிகையல்ல.*

*<<<<<<>>>>>>*

**மத்திய அரசின் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.**

**இத்திட்டம் மிகவும் பயனுள்ளதாக உள்ளது என்று தமிழகத்தின் தேனி மாவட்டத்தை சேர்ந்த இயற்கை விவசாயி திரு பாலசுப்பிரமணியன் தெரிவித்தார்.**

***(Sound Byte — பாலசுப்பிரமணி — 40 Sec.)***

*<<<<<<>>>>>>*

**புதுதில்லியில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள குடியரசு தின அணிவகுப்பில் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 400**

தேசிய மாணவர் படையினர் பங்கேற்க உள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

மேலும், இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின்கீழ், இம்முறை 25 நட்பு நாடுகளை சேர்ந்த மாணவர்கள் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொள்ள இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பங்கேற்கவுள்ள தேசிய மாணவர் படையினருக்கான சிறப்பு முகாம் புதுதில்லியில் இன்று தொடங்கியது.

இந்நிகழ்ச்சியில் பேசிய **N C C** தலைமை இயக்குனர் லெப்டினன்ட் ஜென்ரல் **Virendra Vats,** தன்னலமற்ற சேவை, தலைமை பண்பு உள்ளிட்ட பிரிவுகளில் மாணவர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சாதி, மதம், மொழிகளை கடந்து தேச நலனை முதன்மையாக கொண்டு செயல்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

இலங்கை உயர்நீதிமன்றத்தை சேர்ந்த 20 நீதிபதிகளுக்கு இந்தியாவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக கொழும்புவில் உள்ள இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.

போபாலில் உள்ள தேசிய சட்டக்கல்வி நிறுவனத்தில் இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றங்களில் தொழில்நுட்ப பயன்பாடு, டிஜிட்டல் பரிமாற்றம், சைபர் குற்றம் தடுப்பு, மின்னணு ஆதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பிரதமர் திரு நரேந்திர மோடி இலங்கைக்கு கடந்த ஏப்ரல் மாதம் சென்றபோது இதுதொடர்பாக அறிவிப்பு வெளியிட்டதையடுத்து, பல்வேறு துறைகளில் இலங்கையை சேர்ந்த அரசு அலுவலர்களுக்கு இந்தியாவில் சிறப்பு நிர்வாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

இலங்கைக்கு எதிரான **5-**ஆவது மற்றும் இறுதி மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை **2** ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு **7** ரன் எடுத்துள்ளது.

திருவனந்தபுரத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், டாஸ் வென்ற இலங்கை, இந்தியாவை பேட் செய்ய பணித்தது.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரில் நான்கு போட்டிகளில் வெற்றிபெற்ற இந்திய அணி ஏற்கனவே தொடரை கைப்பற்றியுள்ளது.

-------------

ஹாங்காங் சர்வதேச ஓபன் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Visakh N R** வெண்கலப்பதக்கம் வென்றார்.

-------------

பள்ளிகளுக்கு இடையேயான தேசிய டேபிள் டென்னிஸ் போட்டியில் மகாராஷ்ட்ரா மற்றும் சி பி எஸ் இ அணிகள் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளன.

**<<<<<<<END>>>>>>>**